பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 18 (31—5—68) வெள்ளி ★ வெளியூர்: வைகாசி 19 (1—6—68) சனி [இதழ்: 291

பீகார் என். ஜி. ஓ.-க்கள் கோரிக்கைகள் --- மனைவிமார்கள் போராட்டம்

பீகார் மாநில என்.ஜி.ஓ.-க்களின் மனைவிமார்கள் 200-பேர் சேர்ந்து முதலமைச்சர் வீட்டு முன் அறப்போரில் ஈடுபட்டனர்.

மத்திய அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் அகவிலைப் படியளவுக்குத் தங்கள் கணவன்மார்களுக்கு அகவிலைப் படி வழங்க வேண்டும் என்றும், கஜேந்திர கட்கார் குழு அறிக்கையைச் செயல்படுத்தவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை முழக்கம் எழுப்பினர்.

பல குரலில் பேசும் டெல்லியின் கல்வித் துறை

குழப்பத்தை மேலும் அதிகப்படுத்தும் வேதனை!

மத்திய பள்ளிகளில் இந்தித் திணிப்பு--- முன்னாள் கல்வியமைச்சரின் கண்டனம்

பம்பாய், மே 30---

"மத்திய கல்வியமைச்சுத்துறை ஒரு குரலில் பேசவில்லை; பல்வேறு குரல்களில் பேசுகிறது"

என்று முன்னாள் கல்வியமைச்சர் திரு. எம். சி. சாக்ளா குறிப்பிட்டுக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசுப் பள்ளிகளில் பயிற்சி மொழியாக இந்தியைத் திணிக்க முனைந்திருப்பது குறித்து அவர் கருத்தறிவிக்கும் வகையில் மேலும் கூறியதாவது:—

"வரலாறு, மானிட இயல் போன்ற பாடங்களை இந்தியில் கற்பிப்பது என்ற மத்திய அரசின் தற்போதைய முடிவு இந்தி வழங்காத மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களைப் பொறுத்தவரை எப்படிச் செயல்படுத்தப்படும் என்பது தெரியவில்லை.

"தென்னாட்டிலிருந்து வரும் மாணவர்கள், ஆங்கிலத்திலோ, வேறு தென்னிந்திய மொழியிலோ கல்வி பயின்றவராவர்; எனவே, இந்தியைப் பயிற்சி மொழியாக்குவது தொல்லைபயப்பதாகும்.

"மத்தியப் பள்ளிகட்கு அண்மையில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கை, 'பிரச்சினையே இல்லாத இடத்தில் ஒரு புதிய சிக்கலை உண்டாக்கும் துரதிருஷ்ட வசமானதாகும்.

'மத்திய கல்வித்துறைத் துணையமைச்சர் திரு. பகவத் ஜா ஆசாத் தந்த விளக்கம், இருட்டையே அதிகமாக்கியிருக்கிறது; 'ஏற்கனவே பின்பற்றப்பட்ட கொள்கைக்கு இணக்கமானதே 'தற்போதைய கொள்கை' என அவர் சொல்வதை நான், சரி என்று நினைக்கவில்லை. ஏற்கனவே போதிய அளவுக்கு நிலைமை கெட்டிருக்கிறது.

"ஏற்கனவே குழம்பியுள்ள நிலையில் மேலும் குழப்பத்தை உண்டாக்க வேண்டாம் என்று 'ஆண்டவன் பெயரால் கேட்டுக்கொள்கிறேன்.

"அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று மக்களுக்கும், அதைவிட மிக முக்கியமாக ஆசிரியர்கட்கும் விளக்கம் தரக்கூடியதாய் மத்திய அரசின் கொள்கை என்ன எனத் திட்டவட்டமான---அதிகாரபூர்வமான அறிவிப்பை ஒரே குரலில் நாம் கேட்போமாக!"

தமிழகச் சீரணியைப்போல் குசராத்தில் இளைஞர் அணி

ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்த முதல்வர் திட்டம்

ரூ. 2-கோடி நிதி ஒதுக்குகிறது மாநில அரசு

ஆமதாபாத், மே 31—

நான்காவது திட்ட ஆக்க வேலைகளுக்கு நாட்டிலுள்ள இளைஞர்களின் சக்தியைப் பயன்படுத்த 'இளைஞர் இயக்கம்' ஒன்றை நிறுவ குசராத் மாநில முதலமைச்சர் திட்டமிட்டிருக்கிறார்.

முதலமைச்சர் இதேந்திர தேசாய் தலைமையில் இயங்க இருக்கும் இந்த இயக்கம், குசராத் மாநில அரசின் துணை அமைப்பாகச் செயல்படும்.

இந்த இயக்கம், நாட்டின் ஆக்கப் பணிகளைச் செய்து முடித்திட இளைஞர்களின் சக்தியைப் பயன்படுத்தும்; குசராத் மாநில அரசு இதற்காக நான்காவது திட்ட காலத்தில் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

இந்த இளைஞர் இயக்கம் மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்படும்; பல்கலைக் கழகங்களில் பயிலும் இளைஞர்கள்—உயர்நிலைப் பள்ளி வாலிபர்கள்—மாணவரல்லாத மற்ற இளைஞர்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்முறைப் பணிகளைச் செம்மையாக நடத்த மாநில அரசு திட்டமிட்டிருக்கிறது.

மேலும், இம்மாநிலத்தில் ஏற்கனவே இயங்கிவரும் மாநில விளையாட்டுக் குழுவின் நடவடிக்கைகளைக் கவனத்திலிறுத்தி அதனுடன் ஒத்துழைத்து நற்பணியாற்றும்.

இந்த இளைஞர் குழுவை உக்கை அணைக்கட்டுத் திட்ட வேலைகளில் ஈடுபடுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள சீரணியினர் செய்து வருகின்ற சிறப்புப் பணிகளைப் போன்று உக்கை அணைக்கட்டுத் திட்டப் பகுதியில் இந்த இளைஞர் குழுவை செயல்படுத்த முனைவது பற்றி மாநில அரசு ஆலோசித்து வருகிறது.

கிராமங்களுக்குச் செல்லும் பாதைகளைப் புதிதாகப் போடுவதும் இதில் முக்கியப் பணியாகும்.

கூட்டுறவுப் பண்டகசாலைகள், படிப்பகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கலைத் தொடர்பு கொண்ட சிறு நூல்கள் ஆகியவற்றை உருவாக்கும் திட்டமும் இக்குழுவின் முக்கியப் பணிகளாகும்.

சர்வாதிகாரியாக மாறுகிறார் டிகால்!

பிரான்சில் உள்நாட்டுப்போர் மூளும்?

'சுதந்தரத்தை மக்கள் நிலைநாட்டுவர்' என சோஷலிஸ்டுத் தலைவர் நம்பிக்கை

பாரிஸ், மே 31—

பிரெஞ்சு தேசிய சட்டமன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டுள்ள அதிபர் டிகால், உடனடியாக, பொதுத் தேர்தல் நடத்துமாறும் உத்தரவிட்டார்; 'நெருக்கடி நிலைமை நீடிக்குமானல், அவசரகால அதிகாரங்களை நான் ஏற்க நேரிடக் கூடும்' எனவும் எச்சரித்துள்ளார்.

"தற்போதுள்ள சூழ்நிலையில் நான் ஓய்வு பெறப் போவதில்லை; தலைமையமைச்சரையும் மாற்றப் போவதில்லை"

என்று அவர், வானொலியில் 6-நிமிட நேரம் ஆற்றிய உரையில் நாட்டிற்கு அறிவித்தார். மேலும் அவர் சுட்டிக்காட்டியதாவது:—

"கம்யூனிஸ்டு சர்வாதிகார அபாயம் பிரான்சை சூழ்ந்துகொண்டிருக்கிறது.

"தற்போதைய பலாத்காரம் நீடிக்குமானல், ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேர்தலைத் தவிர, வேறு வகையான நடவடிக்கைகளையும் நான் மேற்கொள்ள வேண்டி[illegible]ம்."

"அரசின் அதிகாரங்கள் அனைத்துக்[illegible] சட்டபூர்வமான இருப[illegible] உறுதியுடன் அறிவித்த அதிபர் டிகால், அதே தொடர்பில், 'இன்று முதல் தேசிய மன்றம் கலைக்கப்படுகிறது' என்றும் தெரிவித்தார்.

டிகால் உத்தரவின்படி, நாடாளுமன்றத்தின் கீழவையான தேசிய சட்டமன்றத்தைக் கலைப்பதாக அதன் தலைவர் அறிவித்தபோது, அவையில் குழப்பம் நிலவியது. இரண்டாவது உலகப் போருக்குப் பின், இந்த அளவுக்குக் குழப்பம் ஏற்பட்டதே இல்லை!

"அதிபர் டிகாலின் அறிவிப்பு, உள்நாட்டுப் போரை அழைப்பதாக இருக்கிறது; ஒரு சர்வாதிகாரியின் பேச்சு அது; சுதந்தரத்தை மக்கள் நிலைநாட்டுவர்"

என, பிரெஞ்சு சோஷலிஸ்டுத் தலைவர் கூறியிருக்கிறார்.

சென்னை மாவட்ட தி.மு.க. வட்[illegible] (டிவிஷன்) கிளைத் தேர்தல்கள்

சூன் 23-ம் நாளன்று நடைபெறும்

★

சென்னை மாவட்ட தி.மு.க. வட்ட (டிவிஷன்) கிளைகளின் தேர்தல்கள் சூன் 1, 2 ஆகிய நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது; ஆனால், அண்மையில் பிரிக்கப்பட்ட வட்டங்களின் அடிப்படையில் மேலும் சில விவரங்கள் பெறவேண்டியிருப்பதால், சென்னை வட்ட (டிவிஷன்) கிளைகளின் தேர்தல்கள் சூன் 23 ஞாயிறு காலை 10 மணிக்கு சென்னையின் 120 வட்டங்(டிவிஷன்)களிலும் நடைபெறும்.

'அறிவகம்', சென்னை-13
30—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மின்சார வெட்டு இல்லை

கழக ஆட்சியில் மற்றொரு நல்ல செய்தி

சென்னை, மே 31—

முன்பெல்லாம் ஒவ்வோராண்டும் கோடைக் காலத்தில் ஏற்பட்டுவந்த மின்சார வெட்டு இந்த ஆண்டில் இல்லை.

தற்போது போதிய மின்சாரம் திருப்திகரமான நிலையில் இருக்கிறது.

ரேணிகுண்டா விபத்துக்கு டிரைவரே காரணம்

இரயில்வே அமைச்சுத் துறை அறிவிப்பு

புதுடில்லி, மே 31—

"கடந்த [illegible] நாளன்று ரேணிகுண்[illegible]வ நிலையத்தில் [illegible] விபத்துக்கு, [illegible]வர்தான் [illegible] இரயில்வே [illegible]றது. [illegible] இரயிலின் [illegible] லட்சியம் [illegible] வண்டியை ஓட்டி வந்[illegible]ர் எனபதற்கு ஆதாரம் இருக்கிறது; அதனால்தான் விபத்து ஏற்பட்டது" என்று அறிக்கை ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

இரு[illegible]ில் அரசுப் பேரு[illegible]கள் நிறுத்தம்

சென்னை, மே 30—

சென்னை—கிருஷ்ணகிரி இடையே திருவண்ணாமலை வழியாக ஓடும் 539 எண்ணுள்ள தமிழக அரசு விரைவுப் பேருந்தும், கோபிசெட்டிபாளையம் வழியாகச் செல்லும் 549 எண்ணுடைய கோவை—சேலம் அரசுப் பேருந்தும் சூன் முதல் நாளிலிருந்து ஓடாது என அறிவிக்கப்படுகிறது.

சென்னை, மே 30—

தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப் படி உயர்த்தப்பட்டிருப்பதை, தலைமைச் செயலக ஊழியர் சங்கமும், மாநில என். ஜி. ஓ.-க்களும் பொதுவாக வரவேற்றுள்ளனர்.

நம் நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 வைகாசி 18 (31—5—68) வெள்ளி

வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டது

வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் விரைந்து வளர்ந்துகொண்டே இருக்கிறது. வேலை தேடுவோர் தொகையும் நாள் தவருமல் கூடிக்கொண்டே இருக்கிறது.

இவர்களில் சிறு தொகையினருக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் தக்க வகையில், புதிய தொழில்களைத் துவக்குவதற்குத் தேவைப் படக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. அந்த அளவுக்குப் பொருளாதாரச் சுணக்கம் நீடித்து இருந்துவருகிறது.

இப்படி நீடித்திருக்கின்ற பொருளாதாரச் சுணக்கத்துக்கு முடிவு தேடும் முயற்சியில் திட்டக் குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இப்பொருளாதாரச் சுணக்கத்துக்கு முடிவு கட்டவும், புதிய தொழில்கள் பல துவங்கப்படுவதற்கான சூழ்நிலையை உருவாக்கவும், பலவிதமான கருத்துக்கள் கூறப்பட்டு வருகின்றன.

இதே நேரத்தில், பஞ்சாலைத் தொழில் நெருக்கடியால் சூழப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்ற நிலையும், இதன் பலனாக மேலும் உற்பத்தி செய்வது தடைபடக்கூடிய நெருக்கடியும் பரவலாக இருக்கிறது.

நெசவாலைகள் மட்டுந்தான் இந்த நெருக்கடியான கட்டத்தில் இருக்கின்றன என்பதில்லை. இவைகளைவிட, நூற்பாலைகளைப் பற்றிக்கொண்டிருக்கின்ற நெருக்கடி இதுவரை நிகழ்ந்தில்லாத ஒன்ருகும்.

கோவை மாவட்டத்தில் 21 நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளன. இவற்றில் 8 ஆலைகள் இரண்டாண்டுக் காலத்துக்கு மேலாக மூடப்பட்டுக் கிடககின்றன.

தமிழகத்தில் மட்டுந்தான் நூற்பாலைகள் இப்படி மூடப்பட்டுக் கிடக்கின்றன என்பதில்லை. மாநிலங்கள் அனைத்திலும் நூற்பாலைகளின் நிலை இதுவேதான்.

மூடப்படாத ஆலைகளிலும்கூட, உற்பத்தி செய்யப்பட்ட நூல் விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கிறது. இத்தேக்கத்தின் விளைவாக முழு அளவு உற்பத்தியில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு நூற்பாலைகள் பல உள்ளாகியிருக்கின்றன.

நூற்பாலைகளில் உற்பத்தி செய்யபபட்ட நூல் காலாகாலத்தில் விற்பனையாகாமல் ஆலைகளிடமே தேங்கிக்கிடப்பதற்கு, நாடு முழுவதும் பொதுவாக இருந்துவரக்கூடிய பொருளாதாரச் சுணக்கமே பெரிதும் காரணம் என்றுலும் நூலின் விலை கூடுதலாக இருப்பதும் குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

இப்படி நூலின் விலை கூடுதலாக இருப்பதற்கு, தேய்ந்து போன இயந்திரங்களும், பஞ்சின் விலை -- எக்சைஸ் வரி -- விற்பனை வரி -- மின்சாரக் கட்டணம் ஆகிய அனைத்தும் காரணமாகும்.

பஞ்சப்படி உயர்வும், முதலாளிகளின் இலாபப் பங்கும் நூலின் விலையேற்றத்துக்குக் காரணங்களாகும் என்பதையும் மறைப்பதற்கில்லை.

இப்படி நூலின் விலை ஏறியுள்ளதன் பலனாக, உற்பத்தியில் ஈடுபடுவதை ஒரேயடியாகக் கைவிட்டு, மூடிவிடவேண்டிய கட்டாயத்துக்கு நூற்பாலைகள் தள்ளப்பட்டுவிட்டன. இவ்வாறு மூடப்பட்டுக்கிடக்கின்ற ஆலைகளின் தொகை 21 ஆகும்.

ஆலைகள் மூடப்படுகின்றன என்றுல், அதற்குப் பொருள், 'அவ்வாலைகளில் பணியாற்றிவந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், வேலை இழந்து வீதியில் நிறுத்தப்படுகின்றனர்' என்பதாகும். வேலை இழந்து வேதனைக்குள்ளாகி வீதியில் நிறுத்தப்பட்டிருக்கின்ற அவலநிலை, 'விருப்பத்தக்கதல்ல' என்பதுடன், பயங்கரமான விளைவுகளை உருவாக்கக் கூடியதுமாகும்.

மூடிக்கிடக்கின்ற ஆலைகளைத் திறக்க முயற்சி எடுத்துக் கொள்ளும் பொறுப்பும், வேலையிழந்து வீதியில் தவித்துக்கொண்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களை மீண்டும் வேலையில் அமர்த்தவேண்டிய பொறுப்பும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் உண்டு. இரண்டு அரசுகளுக்கும் உரிய கடமை இது.

மூடப்பட்டுக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்வதும், வேலை இழந்திருப்பவர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்தச் செய்வதும், மாநில அரசின் சக்திக்கு மீறிய செயலாகும். இத்துறையில் முழுப் பொறுப்பும் அதிகாரமும், இந்திய அரசிடமே இருந்துவருகிறது; என்றுலும், மூடப்பட்டுக்கிடக்கும் ஆலைகளைத் திறக்கச் செய்து மீண்டும் உற்பத்தியில் ஈடுபடச் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ளும்படி இந்திய அரசை வற்புறுத்துவதும், கூட்டாகச் செயல்படுவதும் மாநில அரசின் கடமையாகும்.

மூடப்பட்ட ஆலைகள் மூடப்பட்டுவிட்டதற்குரிய உண்மையான காரணம் என்ன—மூடப்பட்டுக்கிடக்கின்ற ஆலைகளை மீண்டும் திறந்து இயங்கவைப்பதற்குரிய தேவை யாவை—என்பது போன்ற விவரங்களை, முதற்கண் தெரிந்து கொண்டாக வேண்டும். இவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால்தான், மூடப்பட்டுக் கிடக்கின்ற ஆலைகளை மீண்டும் உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கு மத்திய அரசினுல் இயலும்.

இதற்காக, மத்திய அரசினுல் நியமிக்கப்படக்கூடிய குழு நியமிக்கப்படுகின்ற காலம்—குழு விசாரணையில் ஈடுபடுகின்ற காலம்—குழு. தன் அறிக்கையைத் தருகின்ற காலம்—குழுவினிடம் தொழிலாளர்கள் சார்பில் கருத்தறிவிக்கின்ற உரிமை—இன்னும் இதுபோன்ற பல பிரச்சினைகளில் முதற்கண் தமிழக அரசுக்கும், சில குறிப்பிட்ட தொழிற்சங்கங்களுக்கும் இடையில் உடன்பாடு காணமுடியவில்லை. இறுதியில், முதல்வர் அண்ணு அவர்களின் அரிய முயற்சியால் இப்பொழுது உடன்பாடு ஏற்பட்டுவிட்டது.

முதலமைச்சர் அண்ணு அவர்கள், மனிதாபிமானப் பிரச்சினையாகவே முடிவுகட்டி, இப்பிரச்சினையை அணுகியுள்ளார். தொழிற் சங்கங்களுடன் சிறந்த உடன்பாடும் கண்டுள்ளார்.

இதயத்தைத் தொட்ட நிகழ்ச்சிகள்--அமெரிக்காவில் அண்ணு அனுபவம்

வாஷிங்டனில் அண்ணு அவர்கள் தங்கியிருக்கையில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகள் பற்றி 'ஆனந்த விகடன்' இதழில் எஸ். உதயமூர்த்தி என்பவர் எழுதியுள்ள கட்டுரையிலிருந்து சில முக்கியப் பகுதிகள் இங்கு தரப்பட்டிருக்கின்றன:—

கிராமங்களைக் காண விரும்பினுர்!

"அமெரிக்காவில் அண்ணு அவர்கள், கிராமாந்தரச் சூழ்நிலையையும், இயற்கை எழிலையும் மிகவும் அனுபவித்தார்—

'நான் உங்கள் நாட்டை அதன் கிராமங்களை—அதன் ஆத்மாவைப் பார்க்க விரும்புகிறேன்'

என்று கூறியதால், கூடிய அளவுக்கு அவருக்குக் கார் அல்லது இரயிலில் பயணம் செய்ய ஏற்பாடு செய்திருந்தார்கள்."

அவர்களுடைய ஆர்வம் வியக்கத்தக்கதாக இருந்தது!

"வாஷிங்டன் இரயில் நிலையத்தில் அண்ணு அவர்கள் வந்திறங்கினுர். இந்தியத் தூதுவரகத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், உலக பாங்கி அதிகாரிகளும், மற்றும் பலரும் அவரை வரவேற்றனர்.

4,000 மைல் தொலைவிலுள்ள ஒகியோவிலிருந்து மாயவரத்தைச் சேர்ந்த டாக்டர் சௌந்தரராசன், வாஷிங்டனில் அவரைப் பார்க்க வந்திருந்தார்.

ஆயிரம் மைல் தொலைவிலுள்ள பிளாரிடாவிலிருந்து ஜார்ஜ் என்பவர், தமிழ்நாட்டில் கடல் பற்றிய ஆராய்ச்சிக்கூடம் நிறுவுவதுபற்றி அண்ணுவுடன் பேசுவதற்கு வந்திருந்தார்; அவருக்கு அதில் மிக ஈடுபாடு இருந்தது.

ஏனெனில், சென்னையைச் சுற்றிக் கடல் இருப்பதால், மீன் பிடிப்பு, துறைமுகம் போன்ற பல திட்டங்களை உருவாக்க அண்ணுவுக்கு எண்ணமிருந்தது.

திட்டங்களுடனும், நல்ல யோசனைகளுடனும் வந்து பேசும் தமிழர்களது ஆர்வம் வியக்கத்தக்கதாய் இருந்தது!

எந்தத் தியாகத்தையும் செய்ய தயாராகுங்கள்!

ஜார்ஜ், திருநெல்வேலியிலிருந்து வருபவர்; குறைந்த சம்பளத்தில் தமிழகத்திற்கு வந்து, திட்டங்களைத் தொடங்குவதாகக் கூறினுர்.

மறந்தும் ஒரு வார்த்தையை அண்ணு கூறவில்லை!

ஆனுல், அண்ணு மிக ஜாக்கிரதையாக இருந்தார்; முன்பு வந்து போன சிலரைப்போல், 'நீங்களேல்லாம் [illegible]ந்தாலல்லவா நாடு முன்[illegible]? நாடு திரும்புங்கள் — கஷ்டங்களை மேற்கோள்ளுங்கள்' என்று ஒரு வார்த்தை, மறந்தும் கூறவில்லை!

நாட்டில் இன்றிருக்கும் கஷ்டங்களை நன்கு உணர்ந்தவராக — திட்டங்களுக்குத் தேவைப்பட்டவர்களைத் தேவைப்பட்ட சமயத்தில் கூப்பிட்டுக்கோள்ளும் எண்ணம் உடையவராக இருந்தார்!

"இங்கேயே இருங்கள்; நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கோள்ளுங்கள்; அமெரிக்க உதவி நமக்கு நிறையத் தேவைப்படுகிறது" என்று கூறினுர்.

அவர்களது நாட்டுப் பற்று இதயத்தைத் தொட்டது!

உலக பாங்கியைச் சேர்ந்த திரு. மாதவன், தமிழகத்தில் தொழில் அடிப்படையில் ஒரு பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் தொடங்குவது பற்றியும், இங்கு கிடைக்கக்கூடிய உதவி பற்றியும், நாட்டின் தொழில் துறைக்கு அது எப்படி உதவும் என்பதையும் கூறினுர்; அண்ணு காது கொடுத்து கேட்டார்.

தமிழர்களது நாட்டுப் பற்று, அவரது இதயத்தைத் தொட்டது என்றே கூறவேண்டும்.

பிறகு ஒரு கூட்டத்தில் அவர் பேசும்போது, 'நாட்டைவிட்டு நாம் தொலைவில் இருப்பதால் நம் நாட்டுப் பற்று மிக அதிகமாகிறது; அதை நான் இங்கே காண்கிறேன்' என்றுர்.

உருக்கமான வரலாறு சோக நிகழ்ச்சியாக விரிந்தன!

லிங்கன் தியேட்டருக்கு அண்ணு சென்றுர்; லிங்கன் கொல்லப்பட்ட இடம் அவர் உட்கார்ந்திருந்த நாற்காலி—எல்லாவற்றையும் கண்டார்; அந்த உருக்சமான வரலாறு சோக நிகழ்ச்சிகளாக அவருடைய கண்முன் விரிந்திருக்க வேண்டும். லிங்கன், கென்னடி, காந்தி, மார்டின் லூதர் கிங் போன்ற பெருந் தலைவர்களுக்கு நேர்ந்த முடிவு, அவர் மனத்தை உலுக்கி இருக்க வேண்டும்; இவைகளைப் பற்றி பின்னுல், எழுத்திலும் பேச்சிலும் வடித்துக் கொடுப்பதாக அவர் சொன்னுர்.

விமான நிலையத்தில் கூடியிருந்தோருக்கு அண்ணு அவர்கள், ஒரு சிறு உரை ஆற்றுகிறுர்:—

"அமெரிக்காவின் சாதனை கண்டு பிரமித்தேன். நாம், நமது மனித சக்தியைக் கொண்டுதான் முன்னேற வேண்டும். அமெரிக்க முறைகளை, நம் தேவைக்கேற்ப அமைத்துக்கொள்ள வேண்டும். நம் சாதனையில் எனக்கு நம்பிக்கையும், உறுதியும் இருக்கிறது. அமெரிக்கர்களுடன் நாம் நெருங்கிய தொடர்பு கொள்ளவேண்டும்; நீங்கள் உங்களுக்குத் தோன்றும் கருத்துக்களைச் சேகரியுங்கள்--எழுதுங்கள்!"

தமிழகம் முழுவதும் இந்திர விழா!

அமைச்சரின் ஆர்வம்

தரங்கம்பாடி, மே 28—

"பூம்புகாரின் பழம்பெரும் விழாவான 'இந்திர விழா' இனி தமிழகம் முழுவதிலும்—அரசினர் ஒத்துழைப்புடன் கொண்டாடப்பட வேண்டும்"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி அவர்கள் கருத்தறிவித்துள்ளார்.

ஞாயிறன்று இந்திர விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியான தமிழ் இலக்கிய அரங்கைத் துவக்கிவைத்துப் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டதாவது:-

"பண்டையத் தமிழ் கலாசாரத்தையும், நாகரீகத்தையும் பிரதிபலிக்கும் பல நிகழ்ச்சிகளுடன் விழா[illegible]ரண்டு அல்லது மூன்[illegible]களுக்கு நடத்தலாம்[illegible]

தொழிலாளர்கள் நல்வாழ்வு பெற்[illegible] வாழ்வதில், தொழிற்சங்கத் தலைவர்களுக்குள்ள [illegible]றிதளவும் குறைந்திருப்பதல்ல—முதலமைச்சர் அண்[illegible]க்குள்ள அக்கறை. இந்த உண்மையைத் தெரிந்து, மூ[illegible] திறக்கப்படுவதையும், வேலையிழந்து வேதனையி[illegible]ருக்கின்ற தொழிலாளிகள் மீண்டும் வேலைவாய்ப்பினைப் பெறு[illegible] ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு தொழிற்சங்கத் தலைவர்களும், ஆலை முதலாளிகளும், மத்திய அரசும், பயங்கரமான நெருக்கடிக்குள்ளாகி இருக்கின்ற நூற்பாலைத் தொழிலுக்குப் புத்துயிரூட்டத் துணியவேண்டும். இவ்வகையில் முதலமைச்சர் அண்ணு அவர்களின் முயற்சியைத் தொழிலாளர் பாராட்டுவர். முதலமைச்சரின் இம்முயற்சி முழு வெற்றிபெற வேண்டும் என, தொழிலாளர்கள் வாழ்த்தவும் செய்வர்.

—கா. க.

எந்த வகையில் தமிழ் நாட்டில் தொழில் நிலை குறைந்தது?

சென்னை, மே 31—

"தமிழ்நாட்டில் ஏறக்குறைய 168 ஆலைகள் இருக்கின்றன. 22 ஆலைகள்தான் மூடப்பட்டிருக்கின்றனவே தவிர, ஆலைகளெல்லாமே மூடப்பட்டு விடவில்லை; ஏறத்தாழ 140-க்கு மேற்பட்ட ஆலைகள் ஓடிக் கொண்டிருக்கின்றன.

"ஒரு மெட்டல் பாக்ஸ் தொழிற்சாலையும், விம்கோ தொழிற்சாலையும் மூடப்படுவதாலேயே தொழில்களெல்லாம் நின்று விட்டதாக அர்த்தமல்ல!

"உற்பத்திப் புள்ளி விவரத்தை எடுத்துக் கொண்டாலும் ஆந்திரம் — கேரளம் — கருநாடகம்—பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களைவிடத் தமிழகமே முன்னணியில் நிற்கிறது.

"1967-ம் ஆண்டு ஏப்ரலிலிருந்து சூன் மாதம் வரை பதிவு செய்யப்பட்ட தொழிலகங்கள்—தமிழ்நாட்டில் 23; ஆந்திரத்தில் 8; கேரளத்தில் 2; கருநாடகத்தில் 11; பாண்டிச்சேரியில்!

"சூலையிலிருந்து செப்டம்பர்வரையில் 57 தொழிலகங்கள் — இதில் தமிழ்நாட்டில் 22; ஆந்திரத்தில் 11; கேரளத்தில் 6; கருநாடகத்தில் 18; பாண்டிச்சேரியில் இல்லை.

"அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை பதிவாக்கப்பட்டவை 53 தொழிலகங்கள்—தமிழ்நாட்டில் 18; கேரளத்தில் 8; கருநாடகத்தில் 11: பாண்டிச்சேரியில் 2; இதிலும் தமிழகத்தில்தான் அதிகம்.

"இந்த ஆண்டு சனவரியிலிருந்து மார்ச் மாதம் வரை பதிவாக்கப்பட்டவை 68; பொதுத் துறைக்கு 5; தனியார் துறைக்கு 27—ஆக 32. ஆந்திரத்தில் பொதுத் துறைக்கு—தனியார் துறைக்கு 12; கேரளத்தில் தனி[illegible]றைக்கு 2; பொதுத் [illegible] கருநாட[illegible] 2[illegible]

[illegible]

யில் தமிழகத்தில் [illegible] குறைந்தது?"

தொழில் அமைச்சர்

--இரா. நெடுஞ்செழிய[illegible]

(48-வது வட்டக் கூட்டத்தில்,

'மொரீசியஸ்வாழ் தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவேன்'

'அங்கு தமிழார்வம் வளர ஆவனசெய்வேன்'

'உறவைப் பலப்படுத்திக்கொள்ள விரும்புவோரிடை உரிய பணியாற்ற முயற்சிப்பேன்'

செய்தியாளர்களிடை அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

சென்னை, மே 30—

"மொரீசியஸ் தீவில் பிரெஞ்சு நாட்டவர், தமிழர்கள், மற்றும் பல்வேறு இனத்தவர்கள் வாழ்கின்றனர்; அவர்களில் 60 ஆயிரம் பேர் தமிழ் நாட்டிலிருந்து சென்று அங்கேயே நிலையாகத் தங்கிவிட்டவர்கள் ஆவர்.

"நீண்ட நெடுங்காலமாக அங்கு வாழும் தமிழ் மக்கள் தமிழகத்துடன் தொடர்பு ஏதுமின்றி வாழ்ந்த காரணத்தால், அவர்களில் பலர் தமிழ் மொழியையே மறந்துவிட்டனர்; மற்றும் சிலரும் தமிழை மறந்து வருகின்றனர்.

"ஆகவே அவர்களிடையே மீண்டும் தமிழ் மொழியின்மீது நல்லார்வத்தை வளர்க்கவும்—மொழி கலாச்சார மேம்பாடுகளை உணர்த்தி அவைகளை உயர்த்தவும் எனது சுற்றுப்பயணம் பயன்படும் என்று நம்புகிறேன்.

"தமிழ் நாட்டிலிருந்து பிழைப்புத் தேடி அங்கு சென்ற நமது இன மக்கள் நம்முடன் மீண்டும் தொடர்புகொள்ளவும். உறவைப் பலப்படுத்திக் கொள்ளவும் மிகவும் விருப்புகின்றனர். அங்குள்ளோர் நமது தாய்மொழியைப் பரப்புவதற்கும், கலாச்சாரத்தைக் காப்பதற்கும் தமிழக அரசின் உதவியை மிகவும் எதிர்பார்க்கின்றனர்.

"அங்கு இன்றைக்கும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகள் அறுபது இருக்கின்றன; அங்கு ஒரு தமிழ்ச் சங்கம் நிறுவ நான் முயற்சி செய்வேன்"

என்று செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கிக் கூறினர்.

ஜூன் திங்கள் மூன்றும் நாளன்று மொரீசியஸ் தீவுக்குப் பயணமாகும் அவர், தமது சுற்றுப்பயணம் பற்றி விளக்குகையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

முதலமைச்சர் பணித்தார் -- புறப்பட்டுச் செல்கிறேன்

"அண்மையில் விடுதலைபெற்ற இந்த நாட்டின் அரசு, தமிழ் மக்களுடன் தொடர்புகொள்ள மிகவும் விரும்பி நல்லெண்ணத் தூதுவராக ஒருவரை அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டது; அதன்படி, தலைமையமைச்சர் இந்திரா, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களிடம், தமிழக அமைச்சர்களில் ஒருவரை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டார்; அண்ணா அவர்கள், அங்கு என்னைச் சென்று வருமாறு பணித்திருக்கிருர். இந்தப் பெருமையை எனக்கு அளித்த அண்ணா அவர்களுக்கு நான் பெரிதும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழின் சிறப்பை விளக்கிப் பண்பாட்டை உணர்த்துவேன்

சென்னையிலிருந்து ஜூன் 3-ம் நாளன்று விமானம்மூலம் புறப்பட்டுப் பம்பாய் செல்கிறேன்; அன்றிரவு மாராட்டிர மாநில ஆளுநர் செரியன் அவர்களின் விருந்தினராகத் தங்கிவிட்டு, மறுநாள் விமானம்மூலம் புறப்பட்டு மொரீசியஸ் தீவுக்குச் செல்கிறேன்.

நீண்ட நெடுங்காலத்திற்குப்பிறகு மொரீசியஸ் தீவுக்கு முதலில் செல்லும் வெளிநாட்டுப் பிரதிநிதியாக நான் செல்லுகிறேன்.

ஜூன் 4-ம் நாளிலிருந்து 11-ம் நாள் வரை ஒரு வார காலம் அங்கு தங்கி தமிழ் மக்களின் நல்லெண்ணத்தையும், தமிழின் சிறப்பையும், கலாச்சார மேம்பாட்டையும் உணர்த்தித் தமிழ் ஆர்வத்தை [illegible]ண்டாக்க முயலு[illegible]

[illegible] மக்களுக்கு வழங்குவதற்குத் திருக்குறள் நூலையும், உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழகத்தின் நுண்ணிய வேலைப்பாடமைந்த கைவினைப் பொருட்கள் ஆகியவற்றையும், அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களையும் கொண்டு செல்வேன்.

உலகத் தமிழ் மாநாட்டு வர்ணனை திரைப் படத்தை எடுத்துச் சென்று திரையிட்டுக் காட்டும் உத்தேசமும் உண்டு.

கைத்தறி ஆடைகட்கு மார்க்கெட்கிடைக்க முயல்வேன்

தமிழ்நாட்டுக் கைத்தறி ஆடைகள், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் ஆகியவற்றிற்கு அங்கு மார்க்கெட் கிடைக்கும் ஏற்பாடுகளைச் செய்யும் எண்ணமும் இருக்கிறது.

வரவேற்பை ஏற்பேன்-- நல்லெண்ணத்தைப் பெறுவேன்

11-ம் நாளன்று அங்கிருந்து புறப்பட்டு தார்-எஸ்-சலாம் (தங்கனிகா என்ற ஆப்பிரிக்க நாட்டின் நகர்களில் ஒன்று) சென்றடைவேன்; அங்கிருந்து மடகாஸ்கர் வழியாக 'தன்ரிவ்' என்ற இடத்திற்குப் போய்ச் சேருவேன்; அங்குள்ள தமிழர்கள் என்னை வரவேற்கவும், தமிழ் மக்களுடன் உறவு கொள்ளவும் விரும்பி முன்னேற்பாடாக விமான நிலையத்துக்கு வந்து வரவேற்பதாக அறிவித்திருக்கிருர்கள்.

அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கு இடமில்லை!

அவர்களது வரவேற்பை ஏற்றுக் கொண்டு நைரோபி சென்று, அங்குள்ள தமிழர்களின் நல்லெண்ணத்தைப் பெறுவேன்.

இந்தப் பயணம் மொரீசியஸ் தீவின் தலைமையமைச்சரின் அழைப்பின் பேரில் மேற்கொள்ளப்படுவதால், மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ செலவு ஏதும் இல்லை; அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்கும் இடமில்லை.

மொரீசியஸ் தீவில் கரும்பு விளைச்சல்தான் அதிகம். அவ்வாறு அந்த இடத்தில் கரும்பு உற்பத்தி அதிகமாவதற்கான காரணத்தைக் கண்டறியவும் ஆவலாக இருக்கிறேன்.

சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு ஜூன் 14-ம் நாளன்று தாயகத் தலைநகரை வந்தடைவேன்.

'அலக்சாண்டரிய நூலகத்தை அறிவற்றவர்கள் கொளுத்திய கதையாகிவிடும்'

ஆங்கிலத்தைக் கைவிடுவது பற்றி இராஜாஜி

சென்னை, மே 31—

"இந்தியாவின் எல்லாத் துறைகளிலும் நிர்வாக மொழியாகப் பல்லாண்டுகளாக இருந்துவரும் ஆங்கில மொழியே அனைத்திந்திய நிர்வாக மொழியாகத் தொடர்ந்திருப்பதற்கு இயற்கைமட்டுமல்ல—சரித்திரச் சான்றுகளும் ஆதரவாக இருக்கின்றன"

என்று இராஜாஜி அவர்கள், 'சுயராஜ்யா'வில் எழுதியிருக்கிருர். அவர் மேலும் எழுதியிருப்பதாவது:—

"ஆங்கிலம் நிர்வாகத்துக்கு ஏற்ற திறமையான மொழியாக இருப்பதுடன், ஒரு தொடர்பு மொழிக[illegible]வேண்டிய அ[illegible]ள்ளது.

"[illegible]ற்றமுடி[illegible]ரோபதும் [illegible]ல்தான் [illegible]

"[illegible]யான சுதந்[illegible]ள்ளது; நான் [illegible]கையான சுதந்[illegible]ன்கிறேன் என்ருல், [illegible] சுதந்தரம் கடன்களா[illegible]ம், பதவிகளாலும், வல்லரசுகளின் கருணையாலும் இடைஞ்சலுக்குள்ளாகியுள்ளது' என்பதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான்.

"கடந்துபோன எல்லா வரலாறுகளையும் ஒழித்துவிட்டதாக நாம் கற்பனை செய்துவிட முடியாது; அல்லது. 'ஒழித்துவிடுவோம்' என்றும் கருதவும் முடியாது.

"ஆங்கிலத்துக்கு ஈடாக, அனைத்திந்தியத் தொடர்பு மொழியாக விளங்க வேறு ஒரு மொழியும் இல்லை. ஒவ்வொரு மாநிலமும் அதனதன் மொழியில் நிர்வாகத்தை நடத்த விட்டுவிட்டு, தொடர்பு மொழியாக ஆங்கில[illegible]க்கவேண்டும்.

"ஆ[illegible]த்துக்குப் பதிலாக வேறு ஒரு மொழியைக் கொண்டுவருவதானது, அலக்சாண்டிரியா நூலகத்தை ரோமாபுரியின் அறிவற்ற சிப்பாய்கள் கொளுத்திவிட்டது போன்ற மிகத் துக்ககரமான சம்பவமாகிவிடும்!

"எனவே, நாடாளுமன்றம் சமீபத்தில் நிறைவேற்றியுள்ள மொழிச் சட்டத்தையும் தீர்மானத்தையும் மறந்து 'அது செத்துப் போகட்டும்'' என்று விட்டுவிட வேண்டும்!''

மறைவு

தி.மு.க. பொதுக்குழு உறுப்பினர் திருக்கோயிலூர் செ. வி. கீர்த்தி அவர்களின் அண்ணன் திரு. கே. ஜே. ஜெகன்னாதன் 14—5—68-ல் இயற்கையெய்திஞர் என்ற செய்தி வருத்தத்துடன் அறிவிக்கப்படுகிறது.

கழக அரசின் கடமையுணர்வுக்கு இதோ ஓர் சான்று!

சென்னை, மே 31—

"மூடப்பட்ட ஆலைகள் திறக்கப்பட வேண்டும்; தொழிலாளர்கள் நல்வாழ்வு பெற வேண்டும்' என்ற நோக்கத்துடன் ஆலைகளுக்கு பண உதவி செய்ய பாங்கிகளுக்கு உத்தரவாதம் கொடுத்தது கழக அரசு!

"அது மட்டுமல்ல; மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி ஆராய இரண்டு குழுக்கள் அமைக்கப்படவும், தேங்கியுள்ள நூல்களை 5 கோடி ரூபாய் அளவுக்கு மத்திய அரசே எடுத்துக்கொள்ளவும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா வழிவகை செய்திருக்கிருர்.

"மேலும், 'எக்சைஸ்' வரியைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, 'வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் துணிகளுக்கு இனி எக்சைஸ் வரி இல்லை' என்று மத்திய அரசு கூறியுள்ளது.

"மேலும் இந்த மாதம் 25-ம் நாள் முதல் 15 நாட்களுக்கு கைத்தறித் துணிகளுக்கு ஐந்து காசுகளாகத் தரப்பட்டுவரும் கழிவுத் தொகை 10 காசுகளாகத் தரப்படும்; இதனுல் தேங்கியுள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாவதற்குக் கழக அரசு ஆவன செய்திருக்கிறது!''

—தொழில் அமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்
(48-வது வட்டக் கூட்டத்தில்)

தலைமைச் செயலகத்தில் பதவி உயர்வு முறை

மாறுதல் செய்து அரசு உத்தரவு

சென்னை, மே 31—

தமிழக அரசுச் செயலகத்தில் துணைவர்களை சூப்பரிண்டெண்டுகளாக உயர்த்துவதற்கான முறை மாறுதலைபற்றி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தலைமைச் செயலகத்திலுள்ள சட்டம், நிதி, சட்டமன்ற இலாகாக்கள் நீங்கலாக மற்ற இலாகாக்கள் எல்லாம் உடனடியாக ஒரே உறுப்பாகக் கருதப்பட வேண்டுமென்றும், ஒரே உறுப்பாகக் கருதித் துணைவர்களை சூப்பரிண்டெண்டுக்குப் பதவி உயர்த்துவது-வேலைகாலி இல்லாவிட்டால் அவர்களை முந்தின பதவிக்கே திருப்பி நியமிப்பது—மறு நியமனம் செய்வது போன்றவற்றைச் செய்ய உத்தரவு பிறப்பித்துள்ளது.

நலத்துறை அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

ஜூன் 1 காலை 10-மணி: மதுரை—தொத்துநோய் மருத்துவமனை தொடர்பான கலந்துரையாடல்; 12-மணி: பெரியகுளம்—மகுதியில் தண்ணீர்த் தொட்டிக்கு அடிக்கல் நாட்டல்; மாலை 3-30 மணி: ஆண்டிப்பட்டி-ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5-மணி: பெரியகுளம் — நகராட்சி வரவேற்பு; தாய்--சேய் நல விடுதி அடிக்கல் நாட்டல்; சாக்கடைத் திட்டத் துவக்கம்; நகரசுத்தித் தொழிலாளர் குடியிருப்புத் திறப்பு; 6-30 மணி: தேவதானப்பட்டி — ஊராட்சி வரவேற்பு; மகுதி வரவேற்பு; பொதுமக்கள் வரவேற்பு; இரவு 8-மணி: பெரியகுளம்—பொது மக்கள் வரவேற்பு.

ஜூன் 2 காலை 9-மணி: மேட்டுப்பாளையம்—பேரூராட்சி வரவேற்பு; 10 மணி: ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு; 11 மணி: தாத்தைபங்கார் பேட்டை—பேரூராட்சி வரவேற்பு; பகல் 12 மணி: தும்பலம்—சீரணியினரால் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடத் திறப்பு; மாலை 4 மணி: தொட்டியம்—ஊராட்சி வரவேற்பு; 5 மணி: காட்டுப்புத்தூர்—பேரூராட்சி வரவேற்பு: 6 மணி: பொதுமக்கள் வரவேற்பு.

கருணாநிதி பிறந்த நாள் விழா

இளமுருகு பொற்செல்வி வேண்டுகோள்

கார் விபத்துக்காளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு. இளமுருகு பொற்செல்வி அவர்கள் தெரிவிப்பதாவது:—

"அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், நம் நாட்டிற்கும்—நம் மொழிக்கும்—நம் இனத்திற்கும் செய்த தொண்டுக்கு நன்றியறிதலாக, அவருடைய பிறந்த நாளையொட்டி, 'சென்னையில் ஒரு பெருவிழாக் கொண்டாட வேண்டும்' என்று பெருமுயற்சியுடன் விழாவினை நடத்த எண்ணி, அதற்கான பணிகளையும் செய்துவந்தேன். எதிர்பாராது ஏற்பட்ட கார் விபத்தினுல் மருத்துவமனையில் முடங்கிக் கிடக்கின்றேன் என்பதனை என் அன்புத் தோழர்களாகிய நீங்கள் அறிவீர்கள்.

"சென்னை நகரத்தைச் சிங்கார நகரமாக்கி - வீடுகளில் எல்லாம் விழாக்கோலம் பூணச் செய்து—வீடுகளில் எல்லாம் தோரணங்கள், வளைவுகள் கட்டி—கருணாநிதியின் பிறந்த நாள் விழாவினைப் பெரு விழாவாகச் சென்னை நகரமே கொண்டாடிச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமை வகிக்கும் விழா சிறப்பாக நடைபெறும் என்பது எனக்குத் தெரியும்; என்ருலும், என் உள்ளக்கிடக்கையை உங்களிடம் சொல்லி, மருத்துவமனையில் நம்பிக்கையுடன் ஆறுதல் பெற்றுக்கொண்டு இருக்கிறேன். ஏன்—நீங்கள் எல்லாம் விழாவினைச் சிறப்பாக நடத்துவீர்கள் என்ற நம்பிக்கையில்தான் உயிர் என் உடம்பில் ஒட்டிக்கொண்டு இருக்கிறது.

"'தமிழர்கள் நன்றி கொன்றவர்கள் அல்லர்' என்ற வரலாறு, என்றும் நம்மிடம் நிலைத்து நிற்குமாக!''

மக்களுக்கு உதவும் மருந்து

பயிர்களுக்கும் மருந்தாகிறது!.

மனிதர்களுக்கு வரும் நோய்களைத் தீர்க்கக்கூடிய 'ஆன்ட்டி பயாட்டிக்' மருந்துகள், காய்கறிச் செடிகளைப் பீடிக்கும் ஒரு கொடிய நோய்க்கும் மருந்தாகின்றன!

குளோரோடெட்ராசைக்ளின் டெட்ராசைக்ளின், குளோராம்ஃபெனிக்கல் போன்ற நன்கு தெரிந்த நச்சு ஒழிப்பு (ஆன்ட்டி பயாட்டிக்) மருந்துகளை ஆயிரக்கணக்கான செடிகளுக்குப் பயன்படுத்திப் பார்த்த பின்னரே அமெரிக்க வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள், இந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

தக்காளி, உருளைக்கிழங்கு, காரட், வெங்காயம் போன்ற பல பயிர்களைப் பீடிக்கும் 'ஆஸ்ட்டர் யெல்லோஸ்' என்ற கொடிய நோய்களைத் தடுத்து ஒழிப்பதில் மேற்சொன்ன நச்சு ஒழிப்பு மருந்துகள் பெரும் பயன் விளைவிப்பதாக அவர்கள் கூறினர்.

செடி குறுகிப் போதல், மஞ்சள் பாய்தல், பூக்காமல் போதல் முதலியன இந்நோயின் விளைவுகளாகும். இறுதியில் செடியே பட்டுப் போய்விடும்.

மேற்சொன்ன ஒரு நோய் ஒழிப்புக்காக மட்டுமன்றி, உணவுப் பயிர்களையும், அழகுக்காக வளர்க்கும் செடிகளையும் தாக்கும் இது போன்ற பிற நோய்களை ஒழிக்கவும் ஆன்ட்டிபயாட்டிக் மருந்துகளைப் பயன்படுத்த முடியும் என்ற நம்பிக்கை, விஞ்ஞானிகள் கண்டுள்ள பலன்களின் விளைவாக வளர்ந்துள்ளது.

நல்லெண்ணத் தூதுவராகச் செயலாற்றச் செல்லுகிறேன்

கடல் கடந்து சென்றுள்ள தமிழர்களிடையே தமிழ்ப் பண்பாடு புத்துயிர் பெற முயலுவேன்

மொரீஷியஸ் தீவுக்குச் செல்லும் வழியனுப்பு விழாவில் செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து கருத்துரை

சென்னை, மே 31—

"தமிழ் மொழியை மறந்து, தமிழே பேசத் தெரியாதவர்களாகத் தமிழகத்தைச் சேர்ந்த மக்கள் மொரீஷியஸ் தீவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு தொழிலாளர்களாக அந்த நாட்டுக்குச் சென்றவர்கள், சொந்த மொழியை மறந்து -- சொந்த கலாச்சாரத்தை மறந்து -- தமிழர்களின் பழக்க வழக்கங்களையே மறந்து அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தமிழில் பெயரையே உச்சரிக்கத் தெரியாத நிலையில் அங்கேயுள்ள தமிழர்கள் இருப்பதாக நான் அறிந்தேன்.

"'திரைகடலோடியும் திரவியம் தேடு' எனும் இலட்சியத்தின் அடிப்படையில் பிழைக்கச் சென்ற தமிழர்கள், நமது கலாச்சாரத்தை மறந்துவிடாமல் புத்துணர்ச்சி பெறச் செய்யவும், மொழி, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் ஆகியவற்றில் நாம் ஒன்றாக இருந்தாலும், நாடு—அரசியல்—உழைப்பு என்ற வகையில் அவர்கள் அந்த நாட்டுக்கு உரியவர்களாக இருக்க வேண்டும் என்பதனை எடுத்துரைக்கவுமான நல்லெண்ணத் தூதுவராக நான் செல்கிறேன்."

இவ்வாறு மொரீசியஸ் தீவுக்குச் செல்லும் செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வழியனுப்பு விழாவில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் விளக்கிக் கூறினார்.

மொரீஷியஸ் தீவுக்குச் செல்லும் அமைச்சருக்கு சென்னை 40-வது வட்டத்தில் வழியனுப்பு விழா நடைபெற்றது.

தோழர்கள் மு. கன்னியப்பன், சி. சிட்டிபாபு எம்.பி., டாக்டர் ஹண்டே எம்.எல்.ஏ. ஆகியோர் பேசினர்.

'ஆகாசவாணி' எனக் கூறுவதை ஒழித்து 'வானொலி' என வழங்க அரும்பணியாற்றியமைக்காக அமைச்சருக்கு, வட்டத் தோழர்களின் சார்பில் வெள்ளியினாலான வானொலிப் பெட்டி ஒன்று அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள், அமைச்சருக்கு வானொலிப் பெட்டியைப் பரிசளித்துப் பேசினார்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் மேலும் பேசியதாவது :-

"அந்த நாட்டிலேயிருந்து இங்கே நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருந்த சிலர், இங்கே நமது நாட்டைப் பற்றியும், மொழியைப் பற்றியும், நமது பண்டைக் கலாச்சாரத்தைப் பற்றியும், நமது முன்னோர்கள் எப்படி இருந்தார்கள் என்பது பற்றியும் மாநாட்டின் மூலம் மிக நன்றாக அறிந்து சென்றார்கள்; மாநாட்டுக்கென நடத்தப்பட்ட ஊர்வலக் காட்சிகளைக் கண்டு உணர்ச்சி பெற்றுச் சென்றார்கள்.

நான் அந்த நாட்டுக்குச் சென்றதும் அங்கே தமிழ் வளர்ச்சி பெற வாய்ப்பிருக்கிறதா—தமிழகத்தின் சார்பில் என்னென்ன நன்மைகள் செய்ய முடியும் என்பது குறித்து ஆராய்ந்து வருவேன்.

நமது தமிழினத்தின் கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும், பழக்க வழக்கங்களையும் அவர்கள் முற்றிலும் மறந்துவிடாமலிருக்கவும், அவர்களிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்தவும் வழி வகைகளைக் கண்டுவரத்தான் நான் இந்தப் பயணத்தை மேற்கொள்கிறேன்.

அங்குள்ள தமிழ்ப் பிள்ளைகளுக்கு நமது மாநிலத்தில் தமிழ் படிக்க வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்பதனையும், நம்மிலே சிலரை இங்கிருந்து அனுப்பி அங்கே தமிழை வளர்ச்சி பெறச் செய்ய முடியுமா என்பதனையும் அறிந்து வருவேன்.

நான் தன்னந்தனியாகச் சென்றாலும் இந்தப் பணியை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு வருவேன்."

சட்ட அமைச்சர்
செ. மாதவன்
சுற்றுப்பயணம்

ஜூன் 1 காலை 9 மணி: மதுரை தொத்துநோய் மருத்துவமனை அமைக்கும் இடம் குறித்து சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் பங்கேற்பு; மாலை 5 மணி: தூத்துக்குடி கூட்டுறவுச் சங்க வெள்ளி விழாக் கட்டிடத் திறப்புவிழா; 7 மணி: பொதுக் கூட்டம்.

ஜூன் 2 காலை 8-30 மணி: செம்பட்டி—பொது வரவேற்பு; 9 மணி: புலியூரான் ஊராட்சி வரவேற்பு; 10 மணி: செட்டிக் குறிச்சி கூட்டுறவுவேளாண்மை பாங்கி வரவேற்பு; 10-30 மணி: பந்தல்குடி கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

புதுவை எம். ஏ. சண்முகம்
சுற்றுப்பயணம்

ஜூன் 2: கீழூர்; 3: பண்டசோழநல்லூர்; 4: வம்புப்பட்டு; 7: பாகூர்; 8: புதுவை; 9: அரியாங்குப்பம்; 10: நெட்டப்பாக்கம்; 11: வில்லியனூர்; 12: சின்ன காலாபட்டு; 13: முதலியார் பேட்டை.

தமிழகத்தின் காப்புணர்வு ஆட்சியாக இன்றையத் தமிழக அரசு!

கடல் கடந்த தமிழருக்கெல்லாம் கைகொடுக்கும் சக்தியாக விளங்குகிறது

சென்னை, மே 31—

"மொரீஷியஸ், பிஜித் தீவு போன்ற தூரக் கிழக்கு நாடுகளிலேயுள்ள தமிழர்களின் எதிர்காலம், வினாக் குறியாக இருக்கிறது!

"சிங்கப்பூர், பினாங்கு போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அச்சமற்ற நிலை இது வரை இருந்துவந்தது; ஆனால் இப்போது அந்த நிலை மாறிவிட்டது!

"உழைப்புக்கு அழைப்பு விடுத்த உலக நாடுகளுக்கெல்லாம் ஓடோடிச் சென்று பாடுபட்டவன் தமிழன்!

"காடுகளைத் திருத்தி நாடுகளைப் புதுக்கியவன் தமிழன்!

"நச்சுப் பூச்சிகளுக்கும்—மலைப் பாம்புகளுக்கு மிடையில், இலங்கை, பர்மா போன்ற நாடுகளை மேம்படுத்தியவன் தமிழன்!

"நான் சென்ற நாடுகளில் உள்ள தமிழர்களைக் கண்ட பிறகு — அவர்களிடையே இருக்கின்ற உணர்வைக் கண்ட பிறகு—அந்த அனுபவமும் என்னைத் தி. மு. கழகத்தை ஆதரிக்கச் செய்தது.

"இலங்கை, பர்மா, மலேசியா, மொரீஷியஸ் பகுதிகளிலுள்ள தமிழர்களுக்குக் கைகொடுக்கும் சக்தி 'தமிழகத்தில் இருக்கிறது' என்ற உணர்வு அவர்களிடையே ஏற்பட்டிருக்கிறது!

"நாமெல்லாம் தமிழர்கள் என்ற உணர்வோடும், 'நம்முடைய மொழி தமிழ்' என்ற எண்ணத்தோடும் 'தமிழகம்' நாம் தவழ்[illegible] ...டும் பூஞ்சோலை[illegible] ...வோடும் இ[illegible] ...க்க வேண்[illegible]

"என்[illegible] ...யில், இன்றைய[illegible] ...ரசு, தமிழினத்தி[illegible] ஆட்சியாக[illegible] ணத்தால்தான் [illegible] னைச் சார்ந்தவர்களு[illegible] அரசை ஆதரிக்கிறோம்"

என்று, மொரீஷியஸ் தீவுக்குச் செல்லும் அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுக்கு நடத்தப்பட்ட வழியனுப்புக் கூட்டத்தில், தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

தி.மு.க. கிளைகளின் மறுதேர்தல்கள்

தலைமைக் கழக அறிவிப்பு

ஏற்கனவே மே 4, 5-ம் நாட்களில் நடைபெற்ற கழகக் கிளைகளின் தேர்தல்களில் குறிப்பிட்ட குறைபாடுகளைக் குறிப்பிட்டு அந்தந்த கிளைகளைச் சார்ந்த தோழர்களிடமிருந்து தலைமைக் கழகத்திற்குக் கிடைத்த முறையீடு—குறைபாடுகளைப் பரிசீலனை செய்ததில், கீழ்க்காணும் கிளைகளில், குறிப்பிட்டுள்ள நாட்களில், குறிப்பிட்டுள்ள தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர்களின் தலைமையில், மறுதேர்தல் நடைபெறவேண்டுமெனத் தலைமைக் கழகம் முடிவுசெய்து அந்தந்தக் கிளைகளின் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

2—6—68 மாலை 6 மணி

திருவொற்றியூர் நகர

4, 23-வது வார்டுகள்

[4-வது வார்டில் அவைத் தலைவர், செயலாளர் தவிர மற்ற பொறுப்புகளுக்கான தேர்தல்கள் நடைபெறும்]

ஆணையாளர் : வழக்கறிஞர்
வேலூர் நாராயணன்

4—6—68 மாலை 6 மணி

திட்டக்குடி

(தெ. ஆ. மாவட்டம்)

ஆணையாளர் : பொதுக்குழு உறுப்பினர்
கோ. செங்குட்டுவன்

4—6—68 மாலை 6 மணி

சோளிங்கபுரம்

(வ. ஆ. மாவட்டம்)

ஆணையாளர் : சென்னை மாவட்ட தி. மு. க. அவைத் தலைவர்
காஞ்சி மணிமொழியார்

4—6—68 மாலை 6 மணி

பம்மல்

(செங்கற்பட்டு மாவட்டம்)

ஆணையாளர் : செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர்
சி. வி. எம். அண்ணாமலை

'அறிவகம்', சென்னை-13
30—5—68

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

"கோ. ஆப்டெக்ஸ்"
எல்லா வகை கைத்தறித் துணி விற்பனையின் பேரில் அரசாங்க
விசேஷ தள்ளுபடி
10%
25-5-68 முதல் 8-6-68 வரை
இந்தவிசேஷதள்ளுபடி இந்தியாவெங்கிலுமுள்ள எல்லா "கோ-ஆப்டெக்ஸ்" விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்.
தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
சென்னை-8
ELEGANT

நடக்க இருப்பவை

1—6—68

திருச்சி

8-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6-மணிக்கு உறையூர் பாண்டமங்கலம் அரச மரத்தடியில்; தலைவர்: எஸ். சின்னதுரை; பேசுவோர்: எம். ஆர். ஆர். வாசு, எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன், கே. பெருமாள் பி.ஏ.பி.எல்., ஐ. எம். ஷரீப், த. செவந்திலிங்கம், எம். வி. நாதன், எஸ். மலைக்கனி.

2—6—68

திருத்தங்கல்

நாவலர் நெடுஞ்செழியன் மன்ற 2-வது ஆண்டு நிறைவு விழா; மாலை 7-மணிக்கு செக்கடித் திடலில்; தலைவர்: எம். கருப்பசாமி; பேசுவோர்: ஆ. திராவிடமணி, எஸ். பி. மணியம், அப்தாலீப், ஏ. எஸ். கனி, இரா. பொன்பாண்டியன், டேவிட், இரத்தினம், எம். லூர்துசாமி, எம். இராசு, ஓ. வி. அய்யனார், மற்றும் பலர்.

கூடூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மேல வீதியில்; தலைவர்: த. மாரிமுத்து; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., இல. கரிகாலன், க. சண்முகம், இ. இரத்தினம். (இரவு 8-மணிக்கு முருகு பாண்டியன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

கொரடாச்சேரி

நன்னிலம் வட்ட தி. மு. க. சார்பில் வட்டச் செயலாளர் அ. நடராசனுக்கு மோட்டார் சைக்கிள் பரிசளிப்பு; மாலை 6-மணிக்கு காந்தி பூங்காவில் காட்டூர் இராமையா தலைமையில்—உள்ளாட்சித் துறை அமைச்சர் மா. முத்துசாமி முன்னிலையில்—பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி மோட்டார் சைக்கிளை வழங்குவார்; மன்னை ப. நாராயணசாமி, சி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., கோ. சி. மணி எம்.எல்.ஏ., கே. பெரியசாமி பி.ஏ. ஆகியோர் பேசுவர்; மாலை 5-மணிக்கு முருகுபாண்டியன் குழுவினரின் இசைநிகழ்ச்சி நடைபெறும்; நன்கொடை: ரூ. 5, 2, 1; மகளிர் 50-காசு.

உள்ளாட்சித்[illegible]
மா[illegible]

கே[illegible]

ஜூன் 2 மாலை 3 மணி: த[illegible] தமிழக ஊராட்சி ஒன்றிய க[illegible] நிலை ஊழியர் சங்க முத[illegible] மாநாடு; இரவு 7 மணி: கொரடாச்சேரி பொதுமக்கள் வரவேற்பு.